இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பிற இனத்தார் உன் ஒளி நோக்கி வருவர்; மன்னர் உன் உதயக் கதிர்நோக்கி நடைபோடுவர். உன் கண்களை உயர்த்தி உன்னைச் சுற்றிலும் பார்; அவர்கள் அனைவரும் ஒருங்கே திரண்டு உன்னிடம் வருகின்றனர்; தொலையிலிருந்து உன் புதல்வர் வருவர்; உன் புதல்வியர் தோளில் தூக்கி வரப்படுவர். அப்பொழுது, நீ அதைக் கண்டு அகமகிழ்வாய்; உன் இதயம் வியந்து விம்மும்; கடலின் திரள் செல்வம் உன்னிடம் கொணரப்படும்; பிற இனத்தாரின் சொத்துகள் உன்னை வந்தடையும். ஒட்டகங்களின் பெருந்திரள் உன்னை நிரப்பும்; மிதியான், ஏப்பாகு ஆகியவற்றின் இளம் ஒட்டகங்களும் வந்து சேரும்; சேபா நாட்டினர் யாவரும் பொன், நறுமணப் பொருள் ஏந்திவருவர். அவர்கள் ஆண்டவரின் புகழை எடுத்துரைப்பர். (எசா 60:3-6)

# தலைமுறைகளுக்கு இடையே உரையாடல், கல்வி & வேலை

## திருத்தந்தையின் 55-வது உலக அமைதி நாள் செய்தி

**வத்திக்கான்:** தலைமுறைகளுக்கு இடையே உரையாடல், கல்வி மற்றும் வேலை வாய்ப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கும் பாதையில், துணிச்சலோடும், படைப்பாற்றலோடும் ஒன்றுசேர்ந்து செயல்படுவதற்கு, உலகின் அனைத்து அரசுகளின் தலைவர்கள், அரசியல் மற்றும் ஏனைய சமுதாய அமைப்புகளுக்குப் பொறுப்பானவர்கள், அருள்பணியாளர்கள், மேய்ப்புப் பணியாளர்கள் மற்றும் ஏனைய நன்மனம் கொண்ட அனைவருக்கும் அழைப்புவிடுக்கின்றேன் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 55-வது உலக அமைதி செய்தியில் கூறியுள்ளார்.

திருத்தந்தையின் இந்த உலக நாள் செய்தியை, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர் கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள் தலைமையிலான குழு ஒன்று, டிசம்பர் 21, கடந்த செவ்வாயன்று செய்தியாளர் கூட்டத்தில் வெளியிட்டது.

### அமைதியை அறிவிப்போரின் பாதங்கள்

அமைதியை அறிவிப்போரின் பாதங்கள், மலைகள்மேல் எத்துணை அழகாய் இருக்கின்றன என்ற இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைகள், ஆறுதல்பற்றிப் பேசுகின்றன என்றும், அமைதியை அறிவிக்கும் தூதரின் வருகை, இஸ்ரயேல் மக்களுக்கு, ஒளிமயமான வருங்காலத்தின் துவக்கமாகவும், துன்பம் நிறைந்த வரலாற்றிலிருந்து ஒரு மீள்பிறப்பிற்கு வாக்குறுதியாகவும் இருந்தது என்றும் திருத்தந்தை கூறியுள்ளார்.

அமைதிக்கு, திருத்தந்தை புனித 6-ம் பவுல் அவர்கள் சூட்டியிருக்கும் புதிய பெயரான ஒருங்கிணைந்த வளர்ச்சியே, இக்காலத்தில் அமைதியின் பாதையாக உள்ளது என்றும், அமைதி என்பது எல்லாக் காலங்களிலும், மேலிருந்து கிடைக்கின்ற கொடை மற்றும், பகிர்ந்து வாழ்கின்ற அர்ப்பணத்தின் கனி என்றும் திருத்தந்தை தன் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் அமைதியைக் கட்டியெழுப்பும் கலையானது மக்கள் மற்றும் நாடுகளுக்கு இடையேயுள்ள உறவுகள், நிறுவனங்கள், குடும்பங்கள் துவங்கி, தனிநபர்களின் இதயங்கள் வரை, நம் ஒவ்வொருவரின் நேரடிப் பங்கேற்பை உள்ளடக்கியது என்று கூறியுள்ள திருத்தந்தை, உலகில் நீடித்த நிலையான அமைதியைக் கட்டியெழுப்புவதற்கு மூன்று பாதைகளைப் பரிந்துரைக்க விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். அவை:

1. பகிர்ந்து ஆற்றப்படும் திட்டங்கள் உண்மை வடிவம் எடுப்பதற்கு அடிப்படையாக அமைவது தலைமுறைகளுக்கு இடையே உரையாடல்.
2. கல்வியே சுதந்திரம், பொறுப்புணர்வு மற்றும் வளர்ச்சிக்குரிய கருவி.
3. தொழில், மனித மாண்பு முழுமையாய் மதிக்கப்படுவதற்கு ஒரு கருவி.

இவை ஒவ்வொன்றையும் பற்றி தன் உலக அமைதி நாள் செய்தியில் விளக்கியுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.



### “அமைதியைக் கட்டியெழுப்ப, தலைமுறைகளுக்கு இடையே உரையாடல்”

நேர்மையான ஓர் உரையாடல், அதில் பங்குகொள்ளும் உறுப்பினர்களுக்கு இடையே நம்பிக்கையை வலியுறுத்துகின்றது எனவும், உரையாடலில் நாம் ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொள்ள முடியும் எனவும், இன்னல்களுக்கு மத்தியில், தலைமுறைகளுக்கு இடையே உரையாடலை ஊக்குவிக்க முடியும் என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக் கோளத்தைப் பாதுகாப்பது குறித்து நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றும், சுற்றுச்சூழல் ஒவ்வொரு தலைமுறைக்கும் கொடுக்கப்பட்டுள்ள கடன் என்றும், அதை அடுத்த தலைமுறைக்கு வழங்கவேண்டும் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, நீதி நிறைந்த உலகை அமைக்கவும், பொதுவான நம் இல்லத்தைப் பாதுகாக்கவும் இளையோர் ஊக்குவிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### “அமைதியைத் தூண்டி இயக்குகின்ற கல்வி”

மேலும், அமைதியின் பாதையைக் கட்டியெழுப்புவதற்கு கிடைக்கும் வாய்ப்பில் கல்வி மற்றும் தொழிலை நாம் புறக்கணிக்க முடியாது எனவும், இவை தலைமுறைகளுக்கு இடையே உரையாடலை ஊக்குவிப்பதற்கு சாதகமான கருவிகள் என்றும் கூறியுள்ள திருத்தந்தை, உலக அளவில் கல்வி மற்றும் பயிற்சிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி, குறிப்பிடத்தக்கவகையில் குறைந்துள்ள அதேநேரம், இராணுவத்திற்கென செலவழிக்கப்படுவது அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இளைய தலைமுறைகளின் கல்வி மற்றும், பயிற்சியில் முதலீடு செய்வதன் வழியாக, தொழில் சந்தையில் அவர்கள் தங்களின் சரியான இடத்தைக் கொண்டிருக்க முடியும் என்றுரைத்துள்ள திருத்தந்தை, இந்த முதலீடு, அக்கறை கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்கும் உதவும் என்ற தன் நம்பிக்கையையும் தெரிவித்துள்ளார்.

### “அமைதியைக் கட்டியெழுப்ப தொழிலை உருவாக்குதல்”

எல்லாக் குழுமங்களிலும் நீதி மற்றும், தோழமையைக் கட்டியெழுப்புவதற்கு வேலைவாய்ப்பே அடித்தளம் எனவும், தொழில்நுட்ப முன்னேற்றம், மனிதரின் வேலைக்கு மாற்றாக இடம்பெறக் கூடாது எனவும், இப்பூமியில் அர்த்தமுள்ள வாழ்வு வாழ, தொழில் தேவையான ஒன்று எனவும் திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

### 55வது உலக அமைதி நாள்

“தலைமுறைகளுக்கு இடையே உரையாடல், கல்வி, மற்றும் வேலை: நீடித்த நிலையான அமைதியைக் கட்டியெழுப்பும் கருவிகள்” என்ற தலைப்பில் கத்தோலிக்கத் திருஅவையின் 55-வது உலக அமைதி நாள், 2022-ம் ஆண்டின், சனவரி முதல் நாளன்று சிறப்பிக்கப்படுகின்றது. இந்த உலக அமைதி நாளை, திருத்தந்தை புனித 6ம் பவுல் அவர்கள், 1968ம் ஆண்டில் உருவாக்கி தொடர்ந்து ஆண்டுதோறும் ஜனவரி முதல் நாளன்று சிறப்பிக்கப்படுமாறு அழைப்பு விடுத்தார் என்பதை நினைவில் கொள்வோம்.

## திருத் தொண்டர் மைக்கல் தாஸ் குருத்துவ அருள் பொழிவு பெற்றார்!

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாவட்டத்திற்கு இன்னு மொரு குருவானவர் இவ்வாண்டில் கிடைத்துள்ளார்.



கோலாலம்பூரிலிருந்து ஏறக்குறைய 120 km தொலைவிலுள்ள தம்பின் புனித ஜோன் மரிய வியான்னி ஆலயத்தில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் கடந்த புதன் கிழமை, 29-12-2021 அன்று, மாலை 7.00 மணிக்குத் தொடங்கிய சிறப்புத் திருப்பலியில், திருத்தொண்டர் மைக்கல் தாஸ் அவர்களுக்கு குருத்துவ அருள் பொழிவு செய்து வைத்தார். ஏறக்குறைய முப்பது அருள்பணியாளர்கள் நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து இக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடந்த 65 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் தம்பின் பங்கிலிருந்து குருத்துவ அழைப்புப் பெற்ற முதல் நபர் அருள்பணி மைக்கல் தாஸ் ஆவார். இயேசு கிறிஸ்துவின் சீடனாக, மக்களுக்குச் சேவையாற்ற, பேராயருக்குக்

-தொடர்ச்சி அடுத்துப் பக்கம்..

# இறைத்தூதன்- ஆசிரியரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

'கிறிஸ்துவே கிறிஸ்துமஸின் ஆரம்பம்'; 'கிறிஸ்துமஸ் காலத்திற்கான காரணமும் அவரே' கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸின்' சுலோகங்கள் இக்காலத்தில் மலிந்து விட்டன. கிறிஸ்மஸ் தாத்தா, வண்ண விளக்குகள், கிறிஸ்மஸ் மரம், ஆடல்-பாடல்கள், பல் சுவை உணவு வகைகள், பரிசுப் பொட்டலங்கள் போன்றவைகளால் உலகின் மீட்பரான இறை மைந்தன் கிறிஸ்துவின் பிறப்பு மறைக்கப்படுகிறது. மனிதன் தான் உருவாக்கிய பொருள் களுக்கு கொடுக்கும் மதிப்பை அவற்றை உருவாக்கிய கடவுளுக்கு கொடுப்ப தில்லை. மரங்களும், தாத்தாவும் பொம்மைகளுமே கிறிஸ்துமஸ் பெருவிழா மகிழச்சியாக மாறிவிட்டன.

இச்சூழலை நம்மால் தவிர்க்க இயலாது என்பதும் ஏற்கக்கூடியதே. இவையனைத் தும் நம் வாழ்வின் ஒரு பகுதி. அவை நம்மோடுதான் இருக்கும். ஆனாலும், உலகம் சார்ந்த வாழ்வு நமக்கானது அல்ல. இதில் போராடி வெற்றி பெறவேண்டும்.

சமீபத்தில் நாம் அறிந்திராத, எதிர்பார்க் காத வெள்ளம் நம்மைத் தாக்கியப்போது, படகுகள், கனரக வாகனங்கள் வழியா கவோ, நீந்திச் சென்றோ பாதிக்கப் பட்டோருக்கு உதவிக்கரம் நீட்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். மழை நின்றவுடன் பார்ப்போம் அல்லது நீர் வற்றியதும் சென்று உதவுவோம் என்று காத்திராமல் உடனே நாமும் உதவிக்கு இறங்கினோம்.

இடையர்களுக்கு வானதூதரின் செய்தி யாதெனில் - 'இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந் தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண் பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார்'. அவர்களும் உடனே விரைந்து சென்றார்கள்.

நாமும் நம்முடைய மனித துன்பத் துயரச் சூழல்கள் மத்தியிலும் தடைகளைக் கடந்து, உள்ளேச் சென்று நமக்காக பிறந்துள்ள மெசியாவைக் காண வேண்டும்.



சவால்கள் இருக்கத்தான் செய்யும். மீட்பின் வாய்ப்புக்களை நாம்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இதுவே நாம் கடவுளுக்கு தரும் மாட்சி மனித குலத்துக்கு நாம் தரும் அமைதி. சிமியோன் போன்று, 'உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன' என்று அகமகிழ்வோம்.

பிறந்துள்ள இப்புத்தாண்டில், மீண்டும் 'ஓமைக்ரான்' வகை கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால், பாதுகாப்புக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும். இதில் அலட்சியப்போக்குக் கூடாது. நமது நாடு, நமது மக்கள் என்ற எண்ணத்தில் நல்லதை நினைப்போம், நல்ல செயல்பாடுகளுக்குத் தோள்கொடுப்போம். மலர்ந்துள்ள 2022-ஆம் ஆண்டு, இயற்கை பேரிடர்கள் குறைந்து, தொற்றுநோய் அகன்று மனிதவளமும் மனித நலனும் மேலோங்க இறைவனை தினமும் இறைஞ்சுவோம். எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கு ஆசி வழங்கி, பாதுகாப்பாராக.

அருள்தந்தை சூ.தனிஸ்லாஸ்,

# திருத் தொண்டர் மைக்கல் தாஸ் குருத்துவ அருள் பொழிவு பெற்றார்!

## 'எனக்குப் பின் யார்?'

*முதல் பக்கத்தொடர்ச்சி.*

கீழ்ப்படிந்து பணிபுரிவதாக அருள்தந்தை மைக்கல் தாஸ் வாக்குறுதி அளித்தார்.

'நானே உன்னை தேர்ந்துகொண்டேன்' 'யோவான் 15:16) எனும் கருப்பொருளோடு, தம் அருள்பணி வாழ்வைத் தொடங்கும் இவர், சாதாரண நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராவார் என்பது குறிப்பிடத் தக்கது.

தமது நன்றியுரையில், அருள்பணி மைக்கல் தாஸ், தம்பின் பங்கிலிருந்து 'எனக்குப் பின் யார்' என்ற கேள்வியைக் குழுமியிருந்த மக்களைப் பார்த்துக் கேட்டார். தமது குருத்துவப்பணி சிறக்கவும், புதிய குருத்துவ அழைப்புகள் பெருகவும் தொடர்ந்து மன்றாடும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

நிறைவாக, அருள்பணி மைக்கல் தாஸ் அவர்கள் ஷா ஆலாமிலுள்ள இரக்கத்தின் ஆண்டவர் பங்கில், துணை பங்குத் தந்தையாக பணியேற்பார் என்று பேராயர் அறிவித்தார்.

திரு/திருமதி அந்தோணிதாஸ் & பிலோமினா தம்பதி களின் மூத்த மகனான அருள்பணி மைக்கல் தாஸ் அவர்கள் தம்பினில் பிறந்து வளர்ந்தவராவார். இவருக்கு டெனியல் தாஸ் மற்றும் ஹெரிக் தாஸ் என இரு இளைய சகோதரர்கள் இருக்கிறார்கள்.



அருள்பணி மைக்கல் தாஸ்

இவரது நன்றியுரையில் இவருக்கு எல்லா வகையிலும் நல்லாதரவு அளித்து வழிநடத்திய கல்லூரி விரிவுரை யாளர்களுக்கும் பங்கு மக்களுக்கும், நண்பர்களுக்கும், குறிப்பாக இவரை குருத்துவக் கல்லூரிக்கு அனுப்பி வைத்த அருள்பணி டேவிட் அருளானந்தம் அவர் களுக்கும் நன்றிமாலை சூட்டினார்.

*-அந்தோணி இன்னாசி*

# 'கிறிஸ்து பிறப்பு பாடல்கள்' -உள்நாட்டு வெளியீடு




தம்பின் ஜோன் மரிய வியான்னி தேவாலய நற் செய்தி இசைக் குழுவின் "கிறிஸ்து பிறப்பு பாடல்கள் 2021" குறுந்தட்டு வெளியீடு கண்டது.

காலஞ்சென்ற அருள்தந்தை பிலிப் முத்து தலைமையின் கீழ் 90-ம் ஆண்டுகளில் உருவான வியான்னிஸ் நற்செய்தி இசைக் குழு," வார்த்தை மனுவுருவானார்" தலைப்பில் 11 பாடல்கள் கொண்ட குறுந்தட்டு ஒன்றை சமீபத்தில் வெளியிட்டது. அருட்சகோதரர் பையஸ் அவர்களின் ஒளிப்பதிவு துணையோடு இதனை வியான்னிஸ் குழுவினர் வெளியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இசையின் வழி நற்செய்தி அறிவிப்பதே இக்குழுவின் நோக்கமாகும். நல்லாயன் கீதங்கள் என்ற கேசட்டை 2001-ல் வெளியிட்டனர். 20 ஆண்டுகளுக்கு பிறகு இந்த குறுந்தட்டை வெற்றிகரமாக வெளியிட்டனர். இதில் திறமைகொண்ட புதிய பாடகர்களுக்கு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. ஜூலை 2019-ல் தம்பின் பங்கை சேர்ந்த கெமேன்சே புனித டோமினிக் சென்டரில் இதன் பயிற்சிகளும் பதிவும் ஆரம்பமாகின. ஆனாலும், covid-19 தொற்றின் காரணமாக பல மாதங்கள் தாமதமாகி இப்பணி நிறைவடைந்தது. புனித ஜோன் மரிய வியான்னி பங்கின் பங்குத்தந்தை பீட்டர் அந்தோணி அவர்களின் உறுதுணையோடு இக்குறுந்தட்டு வெளியாகி யுள்ளது என்பதில் மகிழ்கிறோம். மேல் விபரங்கள் பெற, சகோ. சார்ல்ஸ் சூசை 013-6840093 அவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

-சார்ல்ஸ் சூசை

# அனைவருக்குமான இறைவனை உலகிற்குக் காட்டுவோம்!

திருக்காட்சி என்பது ஆண்டவரின் வெளிப்பாடு, விவிலியத்தின் இதர பகுதிகளில் காணப்படும் வெளிப்பாடு போலல்ல இது. ஆண்டவரே மனிதனாக பிறந்து நம்மோடு வாழ வந்ததால் இது மாபெரும் வெளிப்பாடு. இன்றைய நற்செய்தியின் (மத்.2:1-12) முதல் வாக்கியத்தில் மூன்று பாத்திரங்கள் இயேசு, ஏரோது, ஞானிகள் அறிமுகம் பெறுகிறார் கள். கதாநாயகன் இயேசுவைத் தேடி வரும் ஞானிகளுக்கு நடுவில் நிற்பது ஏரோது, பாலமாக அல்ல, தடைக்கல்லாக. ஆண்டவரின் பிறப்புச் செய்தியைக் கேட்டு ஏரோது கலங்கினான். அவனோடு சேர்ந்து எருசலேமும் கலங்கிற்று என நற்செய்தி வாசகம் கூறுகிறது. யூதர்களின் அரசர் பிறந்திருக்கிறார் என்ற செய்தி, ஏரோதுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. எங்கு பதவி பறி போய்விடுமோ என்ற பயம் அவருக்கு.

ஆனால் எருசலேமே எழு! ஒளி வீசு! என முதல் வாசகம் (எசாயா 60:1-6) நம்பிக்கை கொடுக்கிறது. ஞானிகளைப் பற்றி நமக்கு அதிகம் தெரியாவிட்டாலும், அவர்கள் புறவினத்தார்கள். உயர் பதவி வகிப்பவர் களாக இருக்கக்கூடும். காணிக்கையாக பொன்னும், சாம்பிராணியும், வெள்ளைப் போளமும் கொண்டு வந்ததை நோக்கும் போது அவர்கள் செல்வர்கள் என்பதைக் காட்டுகிறது. உயர் பதவியும் செல்வமும் படைத்த அந்நியர்களான அவர்களுக்கென கடவுள் இருந்திருக்கும் போது, யூதர்களின் மெசியாவைத் தேடி வரக்காரணம் என்ன?

பிற இன அந்நியர்களும் யூதர்களோடு மீட்பின் திட்டத்தில் உடன் உரிமை யாளர்கள் என இரண்டாம் வாசகத்தில் (எபே.3:2-6) புனித பவுல் தெளிவுப்படுத்து கிறார். இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் அம்மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டு, பிற இனத்தாரும் கிறிஸ்துவின் வாக்குறுதி யில் உடன் பங்காளிகள் ஆகியிருக்கிறார் கள். இயேசு அனைவருக்காகவும் வந்தார் என்பது வெள்ளிடை மலை. எல்லா இனத்தவரும் அவருக்கு ஊழியம் செய்வார் கள் என இன்றைய திருப்பாடலும் (72:1-13) புகழ்ந்துரைக்கிறது. ஞானிகள் நெடுந்தூரப் பயணத்தை மேற்கொண்டு, குழந்தையாக பிறந்திருக்கும் கடவுளைத் தெண்டனிட்டு வணங்கினர். தேடி வந்த கடவுளைக் கண்டுகொண்டு மனநிறைவு கொண்டனர்.

இதில் புதிர் என்னவென்றால், தேர்ந்தெடுக் கப்பட்ட யூத இனத்தைச் சேர்ந்த அறிஞர்களும் மக்களும் தேவக்குழந்தையை வணங்க வரவில்லை. அவரை வணங்க அந்த ஞானிகள் வெறுங்கையோடு வரவில்லை. இயேசு யார் என்பதை முழுமையாக புரிந்து வந்தனர். இயேசுவின் முழு திருப்பயணத்தையும் அறிந்து, காணிக்கை பொருள்களை உடன் கொண்டு வந்தனர். இயேசு அரசர் என்பதைக் குறிக்கும் வகையில் பொன்னும், இயேசு குரு என்பதைக் குறிக்கும் வண்ணம் சாம்பிராணியும் கொண்டு வந்தனர். இறுதியில், கல்வாரியில் நம் பாவங்களுக்காக பலியாகும் இயேசுவின் திருவுடலுக்கு தெளிக்கப்படும் வெள்ளைப்போள வாசனை திரவியத்தையும் கொண்டு வந்தனர்.

புற இன மக்களாக இருக்கும் நமக்கும் நற்செய்தி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை கீழ்த்திசை ஞானிகளின் வருகை குறிக்கிறது. இறைவன் ஒருவர்தான், அவர் எல்லாருக் கும் பொதுவானவர். அப்படிப்பட்டவரை நாம் நம்மிடம் இருக்கின்ற வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமை உணர்வோடு வழிபடு வோம். அவரை முழு உள்ளத்தோடு தேடி, அவருக்கு உகந்த மக்களாவோம். அதன் வழியாக இறையருளை நிறைவாய் பெறு வோம்.

அந்தோணி இன்னாசி
ஸ்ரீகெம்பாஙான், சிலாங்கூர்

**ஆண்டவரின் திருக்காட்சி பெருவிழா**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எசா 60: 1-6 |
| தி. பாடல்: | 72:1-2. 7-8. 10-11.12-13 |
| 2-ம் வாசகம்: | எபே 3: 2-3a, 5-6 |
| நற்செய்தி: | மத் 2: 1-12 |

ஞாயிறு வாசகம் ஆண்டு 3
வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2
திருப்புகழ் மாலை—பெருவிழா